Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

பக்கங்கள் 12

சுடர் : 38
கதிர் : 49

சனிக்கிழமை 14 ஜனவரி 2023

மார்கழி 30 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2053

குத்துவிளக்குச் சின்னத்தில்

# ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி; 5 கட்சிகள் இணைந்து போட்டி

## புரிந்துணர்வு உடன்படிக்கை இன்று கைச்சாத்தாகும்

## விக்னேஸ்வரன் அணி வெளியேறியது

**யாழ்ப்பாணம், ஜனவரி 14**

**வடக்கு - கிழக்கில் உள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் போட்டியிடும் வகையில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி என்ற பெயரில் தமிழ்த் தேசியக் கட்சிகள் புதிய கூட்டை உருவாக்கியுள்ளன. குத்துவிளக்குச் சின்னத்தில் போட்டியிடும் இந்தக் கூட்டணியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் தலைமையிலான அணி வெளியேறியுள்ளது.**

»11

### சின்னம் அல்லது செயலர் பதவி; இதுவே வெளியேறக் காரணம்

சொல்கிறார் விக்னேஸ்வரன்

யாழ்ப்பாணம், ஜன. 14
ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைமைப் பதவியை விட்டுக்கொடுத்தோம். அதன் செயலர் பதவியைக் கேட்டோம். அவர்கள் தரவில்லை. இல்லாவிடின் எமது கட்சியின் சின்னத்தைப் பயன்படுத்தக் கேட்டோம். அவர்கள் அதற்கும் அனுமதிக்கவில்லை. அதனா

»11

தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்காமல்

### தேசிய பொங்கல் விழாவை யாழில் கொண்டாடுவதை ஏற்க முடியாது!!!

எதிர்த்துப் போராட்டம் என்று பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 14
வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளுக்கு எந்தவொரு தீர்வையும் வழங்காது, யாழ்ப்பாணத்தில் தேசிய தைப்பொங்கல் விழாவைக் கொண்டாடுவதை ஏற்கமுடியாது. அந்த நிகழ்வில் பங்கேற்காது

»11

### விரலை வெட்டி மோதிரம் கொள்ளை

பருத்தித்துறையில் துணிகரம்

யாழ்ப்பாணம், ஜன. 14
வீட்டில் நுழைந்த கொள்ளையர்கள் மோதிரத்தைக் கொள்ளையிட முயற்சித்து தோல்வியடைந்த நிலை

»11

### கொல்லன்கலட்டியில் தாலிக்கொடி திருட்டு

யாழ்ப்பாணம், ஜன. 14
கொல்லன்கலட்டியில் வீட்டிலிருந்தவர்கள் வெளியில் சென்றிருந்த சமயம் 12 பவுண் தாலிக் கொடி திருடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்

»11

கோப்பாய் பொலிஸ் பிரிவில்

### 11 மாத பெண் குழந்தை பாலியல் துஷ்பிரயோகம்!!

உறவுமுறையான சந்தேகநபர் கைதானார்

யாழ்ப்பாணம், ஜன. 14
யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 11 மாதப் பெண் குழந்தையொன்று உறவுமுறையான ஒருவரால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு

»11

### தமிழக மீனவர்களின் படகுகளைத் தாக்குங்கள்

வடக்கு மீனவர்களை உசுப்பேத்துகிறார் டக்ளஸ்

யாழ்ப்பாணம், ஜன. 14
இந்திய மீனவர்களை - தமிழக மீனவர்களைப் பிடிப்பதற்கும் - இடிப்பதற்கும் மிகப் பெரிய இரும்புப் படகுகள் இரண்டை அடுத்த வாரம் மீனவர்களுக்குத் தருவதாக அமைச்சர்

»11

### வடக்கு முன்னாள் ஆளுநர் ரெஜினோல்ட் குரே உயிரிழப்பு

அவரது சாவில் சந்தேகம் என மனைவி தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 14
அரசியல் சந்திப்பின் போது திடீரென மாரடைப்பால் உயிரிழந்த வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ரெஜினோல்ட் குரேயின் (வயது - 74)

»10

### படைக்குறைப்புக்கு தயாராம் அரசாங்கம்!!!

கொழும்பு, ஜன. 14
இராணுவத்தில் ஆள்குறைப்புச் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி தற்போது 2 லட்சத்து 783 ஆக இருக்கும் இராணுவத்தினரின் எண்ணிக்கை 2024 ஆகும்போது

»09

### கட்டுப்பணம் செலுத்தியது ஈ.பி.டி.பி.

யாழ்., ஜன. 14
அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 17 உள்ளூராட்சிமன்

»11

### பொங்கலன்று மின்வெட்டு

கொழும்பு, ஜன. 14
தமிழ் மக்களின் தைப் பொங்கல் பண்டிகை நாளான நாளை ஞாயிற்றுக்கிழமையும் 2 மணி 20 நிமிடங்கள் மின்

»10

### கோதுமை மா விலை குறைவு

கொழும்பு, ஜன. 14
கோதுமை மாவின் மொத்த விலை குறைக்கப்பட்டுள்ளதாக இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

»11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தேர்தலுக்குப் பின்னர் கூட்டமைப்பாக ஆட்சி!

## சொல்கின்றார் மாவை




மன்னார், ஜன. 14

தமிழரசுக் கட்சி தனித்துத் தேர்தலைச் சந்தித்தாலும், இந்தப் பிரிவு நிரந்தரமானது அல்ல. தேர்தலுக்குப் பின்னர் ஆட்சியமைக்கும்போது கூட்டமைப்பாகவே இணைந்து ஆட்சி அமைப்போம் - இவ்வாறு தெரிவித்தார் தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான மாவை சோ.சேனாதிராஜா.

தமிழரசுக் கட்சியின் தேர்தல் முன்னெடுப்புக்கள் தொடர்பில் மன்னாரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த உள்ளூராட்சித் தேர்தலானது பல்வேறுபட்ட தேர்தல்முறைச் சீர்திருத்தங்களுடன் நடத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அவை ஏதுமின்றியே இந்தத் தேர்தல் நடத்தப்படுகின்றது. தேர்தலில் வெற்றிபெற்றாலும் எதிரணி உறுப்பினர்கள் அதிகம் உள்ளதால் வரவு - செலவுத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கோ அல்லது இதர விடயங்கள் தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கோ அது தடையாக இருக்கின்றது. இவையெல்லாவற்றையும் கருத்திற்கொண்டே இந்தத் தேர்தலில் தமிழரசுக் கட்சி தனித்துச் செயற்படுகின்றது. தேர்தலை எதிர்கொள்ளத்தான் தனித்திருக்கின்றோமே அன்றி ஆட்சியமைப்பதற்கல்ல. தேர்தல் முடிந்த பின்னர் கூட்டமைப்பாக இணைந்தே எமது நடவடிக்கைகள் தொடரும் - என்றார்.

'தமிழரசுக் கட்சியின் பிரிவை அடுத்து, புதிய கூட்டணி ஒன்று உருவாகியிருக்கின்றது. இந்தப் புதிய கூட்டணி தமிழரசுக் கட்சி மீண்டும் கூட்டமைப்புடன் இணைந்து பயணிக்க (உள்ளூராட்சிகளில்) அனுமதிக்குமா?' என்று ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதில் வழங்கிய மாவை சேனாதிராஜா, எதிர்ப்புகள் ஏற்படலாம்.

ஆனால் தமிழர்களின் உரிமைகளை வென்றெடுப்பதே எமது எண்ணம். அதைநோக்கி அனைத்து தமிழ்க் கட்சிகளும் பயணப்பட்டால் நல்லதுதான் - என்றார். (ம-60)

# உள்ளூராட்சித் தேர்தல் கட்டாயம் நடத்தப்படும்

*தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று உயர்நீதிமன்றத்துக்கு அறிவிப்பு*

கொழும்பு, ஜன. 14

உள்ளூராட்சித் தேர்தல் திட்டமிட்ட அடிப்படையில் நடத்தப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு, உயர் நீதிமன்றத்துக்கு நேற்று அறிவித்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் ஏற்பாடுகளை செல்லுபடியற்றதாக்குமாறு கட்டளையைக்கோரி ஓய்வுபெற்ற இராணுவ கேர்ணல் டபிள்யூ.எம்.ஆர்.விஜேசுந்தரவால் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குறித்த மனு பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான எஸ்.துரைராஜா, ஜனக் டி சில்வா ஆகியோர் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே தேர்தல்கள் ஆணைக்குழுவின் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், தற்போது திட்டமிட்டுள்ள அடிப்படையில் தேர்தல் நடத்தப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார். மனு மீதான விசாரணை எதிர்வரும் 18ஆம் திகதி மீண்டும் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (ம-44)

# தமிழ் மக்களுடன் மட்டுமே எங்களின் தேர்தல் கூட்டு!

## முன்னணியின் பேச்சாளர் சுகாஷ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 14

தமிழ் மக்களினதும், மாவீரர்களினதும் தியாகங்களுக்குப் புறம்பாகச் செயற்படுகின்ற எவருடனும் தேர்தல் கூட்டு இல்லை. தமிழர்களுடன்தான் எங்களின் தேர்தல்கூட்டு - இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்தார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளர் க.சுகாஷ்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இதுவரை இடம்பெற்றுவந்த கட்சித் தாவல்கள், அதிகாரப்போட்டிகளை தற்போது சிலர் கொஞ்சம் கொஞ்சமாக நிரூபித்து வருகின்றனர். இந்த அதிகாரப் போட்டிக்குள் தற்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியையும் இழுக்கப்பார்க்கின்றனர். ரெலோவுடனும், தமிழரசுக் கட்சியுடனும் தேர்தல் கூட்டில் நாம் ஈடுபடப்போகின்றோம் என்று போலித் தகவல்கள் பரப்பப்படுகின்றன.

நாம் ஒரு விடயத்தில் அன்றுமுதல் இன்றுவரை உறுதியாக உள்ளோம். கூட்டணி என்ற கதைக்கே இடமில்லை.

ஒற்றையாட்சிக்கு ஆதரவு வழங்கி, மாவீரர்களின் தியாகங்களைப் புறமொதுக்கிச் செயற்பட்ட இவர்களுடன் எமக்குத் தேர்தல் கூட்டு இல்லை. மாறாக தமிழ் மக்களுடன்தான் எமக்குத் தேர்தல் கூட்டு உள்ளது. ஒற்றையாட்சிக்குள்ளும் 13ஆவது திருத்தத்துக்குள்ளும் தமிழ் மக்களை முடக்க முற்பட்ட எவருடனும் நாம் தேர்தல் கூட்டை அமைத்துக் கொள்ளமாட்டோம்- என்றார். (ம)

# தமிழர் விடுதலைக் கூட்டணி தனித்துக் களமிறங்க முடிவு

வவுனியா, ஜன. 14

தமிழர் தாயகத்திலுள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் தமிழர் விடுதலைக் கூட்டணி தனித்துக் களமிறங்கும் என்று கட்சியின் ஊடகப் பேச்சாளர் அருண் தம்பிமுத்து தெரிவித்தார். வவுனியாவில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழர் விடுதலைக்கூட்டணி தாயகப் பிரதேசத்தில் உள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் தனித்துப் போட்டியிடவுள்ளது. எம்மோடு இணைந்து செயற்பட்ட அனைவரும் மீண்டும் வரவேண்டும் என்று வரவேற்கின்றோம். பொருளாதார நெருக்கடியான காலத்திலே உள்ளூராட்சி மன்றங்களை ஒருமித்த கருத்தோடு சரியான முறையில் கொண்டுசெல்ல வேண்டிய தேவையுள்ளது.

பல தசாப்தங்களுக்கு பின்னர் ஜனநாயக முறையிலான உள்ளூராட்சி தேர்தல் நடைபெறவுள்ளது. மக்கள் இந்த கடினமான காலத்திலும்கூட தேர்தலில் பங்குபெறவேண்டும்.- என்றார். (ம-110)



முல்லைத்தீவில்

# கட்டுப்பணம் செலுத்தியது இலங்கைத் தமிழரசுக் கட்சி

முல்லைத்தீவு, ஜன. 14

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கைகள் நாட்டில் முன்னெடுக்கப் பட்டுவரும் நிலையில் வடக்கு -கிழக்கு மாகாணத்தில் தனித்து களமிறங்கவுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சி முல்லைத்தீவு மாவட்டத்தில் நான்கு பிரதேசசபைகளின் கீழ் தேர்தலுக்கான கட்டுப் பணத்தினை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை செலுத்தியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் உள்ள தேர்தல் அலுவலகத்தில் தமிழரசு கட்சியின் மாவட்டக் கிளைத் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான க.சிவமோகன், தமிழரசுக் கட்சியின் மாவட்டக் கிளை செயலாளர் து.ரவிகரன், தமிழரசுக் கட்சியின் துணுக்காய் பிரதேச கிளையின் தலைவரும் வடமாகாண முன்னாள் பிரதி அவைத் தலைவருமான வ.கமலேஸ்வரன் ஆகியோர் சென்று நான்கு பிரதேசசபைகளுக்கும் கட்டுப்பணத்தைச் செலுத்தினர். (ம-14,19)

# அம்பாறையில் கட்டுப்பணத்தை செலுத்தியது தமிழரசுக் கட்சி!

கொழும்பு, ஜன. 14

அம்பாறை மாவட்டத்தில் ஏழு உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப்பணத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன். அம்பாறை மாவட்டச் செயலகத்தில் தேர்தல் கட்டுப் பணத்தை நேற்றுமுன்தினம் செலுத்தினார். (ம-14,150)

# மாக்சிச லெனினிசக் கட்சி கட்டுப்பணம் செலுத்தியது

வவுனியா, ஜன. 14

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் களம் இறங்கவுள்ள புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி, தேர்தலுக்கான கட்டுப் பணத்தை நேற்று வெள்ளிக் கிழமை செலுத்தியது.

கட்சியின் வன்னி மாவட்டச் செயலாளர் நி.பிரதீபன் தலைமையில் வேட்பாளர்கள் மற்றும் கட்சியின் உறுப்பினர்களால் வவுனியா மாவட்டச் செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் அலுவலகத்தில் கட்டுப் பணம் செலுத்தப்பட்டது.

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியானது வவுனியா மாநகர சபை மற்றும் வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேசசபை ஆகிய இரு உள்ளூராட்சி மன்றங்களிலும் இந்த முறை தமது வேட்பாளர்களை களமிறக்கவுள்ளது. (ம-14,110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4 சைக்கிள்கள் திருடியவருக்கு 4 மாதங்கள் சிறைத்தண்டனை

யாழ்ப்பாணம், ஜன. 14

நான்கு சைக்கிள்களைத் திருடிய நபருக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தால் நான்கு மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்த நபரொருவர் திருநெல்வேலிப் பகுதியில் தொடர்ச்சியாக சைக்கிள் திருடி விற்பனை செய்து வந்தவேளை கோப்பாய் பொலிஸாரால் அண்மையில் கைது செய்யப்பட்டார். அதனையடுத்து குறித்த நபருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாண நீதிமன்ற நீதிவான் ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதன்போதே அவருக்கு 4 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அத்துடன் திருடப்பட்ட சைக்கிள்களின் உரிமையாளர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் நீதிவான் உத்தரவிட்டார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-14-23)

## சட்டவிரோதப் பொருள்களுடன் கிளிநொச்சியில் ஒருவர் கைது

கிளிநொச்சி, ஜன. 14

கிளிநொச்சி - கோணாவில் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி நாட்டுத் துப்பாக்கி தயாரிப்பதற்கான உதிரிப்பாகங்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கிளிநொச்சி வன உயிரிகள் திணைக்களத்தினரால் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

வன உயிரிகள் திணைக்களத்தினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய மேற்படி நபர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து நாட்டுத்துப்பாக்கி தயாரிப்புக்கான உதிரிப்பாகங்கள், வாள் மற்றும் உடும்பு இறைச்சி ஆகியவை மீட்கப்பட்டன.

சந்தேகநபரை சட்டநடவடிக்கைக்கு உட்படுத்த வன உயிரிகள் திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-113)

## மீனாட்சி அம்மன் ஆலயத்தில் உண்டியல் உடைத்துத் திருட்டு

யாழ்ப்பாணம், ஜன. 14

இருபாலை வேளாந்தோப்பு மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தின் உண்டியல் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டுள்ளது என்று ஆலய நிர்வாகத்தினரால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆலயத்துக்கு வந்த நபரொருவர் வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் உண்டியலை உடைத்து பணம் திருடிச் செல்கின்றமை ஆலய சி.சி.ரி.வி காணொளியில் பதிவாகியுள்ளது. சி.சி.ரி.வி. காணொளியை அடிப்படையாகக் கொண்டு மேலதிக விசாரணைகளை கோப்பாய் குற்றத்தடுப்புப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-14-23)

## உடைமையில் கசிப்பு புத்தூரில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 14

புத்தூர் - ஆவரங்கால் வன்னியசிங்கம் பகுதியில் 4 லீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்புப் பிரிவினருக்கு கிடைத்த தகலுக்கமைய சந்தேகநபர் நேற்று வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்டார்.


26 வயதுடைய இளைஞரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதையடுத்து அச்சுவேலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-14-23)

# 2022ஆம் ஆண்டில் 831 பேருக்கு டெங்கு

## கடந்தவாரம் மட்டும் 30 பேர் அடையாளம்

## யாழ். மாநகர சுகாதாரப் பிரிவு தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜன. 14

யாழ். மாநகரப் பகுதிகளில் 2021ஆம் ஆண்டு 91 பேர் மட்டுமே டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்ட நிலையில், கடந்த ஆண்டு 831 பேர் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாநகர சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் சுகாதாரப் பிரிவால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-


யாழ்.மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கடந்த 2022ஆம் ஆண்டு 831 பேர் டெங்கால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதத்திலேயே அதிகூடிய டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

ஜனவரியில் 86 பேரும், பெப்ரவரியில் 67 பேரும், மார்ச் மாதத்தில் 59 பேரும், ஏப்ரலில் 84 பேரும், மே மாதத்தில் 60 பேரும், ஜூன் மாதத்தில் 80 பேரும், ஜூலையில் 50 பேரும், ஓகஸ்ட் மாதத்தில் 18 பேரும், செப்ரெம்பர் மாதத்தில் 37 பேரும், ஒக்ரோபரில் 53 பேரும், நவம்பர் மாதத்தில் 81 பேரும் டிசெம்பரில் 156 பேரும் என மொத்தமாக 831 பேர் டெங்குத் தொற்றுக்கு உட்பட்டுள்ளனர்.

இதேவேளை கடந்த ஒரு வாரகாலப்பகுதியில் 30 பேர் வரையில் டெங்கால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் - என்றுள்ளது.

டெங்குத் தாக்கம் அதிகரித்து வருவதையடுத்து கட்டுப்பாடு நடவடிக்கைகளும் விழிப்புணர்வுச் செயற்பாடுகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு பொது மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என மாநகர சுகாதாரப் பிரிவு கோரியுள்ளது. (ச-213-17)



## பளை மத்திய கல்லூரிக்கு புதிய அதிபர் நியமனம்

கிளிநொச்சி, ஜன. 14

பளை மத்திய கல்லூரியின் புதிய அதிபராக அதிபர் தரம் 1 ஐச் சேர்ந்த கே. இரவீந்திரா வடமாகாணக் கல்வியமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்டு கடந்த புதன்கிழமை தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். கல்லூரியின் அதிபர் கே. உதயகுமாரன் ஓய்வுபெற்றுச் சென்றமையை அடுத்து புதிய அதிபர் நியமிக்கப்பட்டார். நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிருத்திச்சங்கத்தினர், பழையமாணவர் சங்கத்தினர், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் என பலரும் கலந்துகொண்டனர். (ம-14-113)

## 4,688 நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜன. 14

யாழ். மாநகர பிரதேசத்தில் கடந்த ஆண்டு 4 ஆயிரத்து 688 நாய்களுக்கு விசர் நோய்க்கான ஏ.ஆர்.வி. தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

இதில் 214 வரையிலான நாய்களுக்கு கருத்தடை அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதுடன் வீதிகளில் நடமாடிய கட்டாக்காலி நாய்களும் பிடிக்கப்பட்டு தடுப்பூசி ஏற்றப்பட்டன என்றும் சுகாதாரப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ச-17)

## சிறுவர் மீது துர்நடத்தை தேரர் ஒருவர் கைது

கொழும்பு. ஜன. 14

கடவத்தையிலுள்ள சிறுவர் இல்லமொன்றின் சிறுவர்களை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் தேரர் ஒருவரை சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அதிகாரிகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைது செய்துள்ளனர்.

சிறுவர் இல்லத்தில் 14 மற்றும் 17 வயதுடைய இரு சிறுவர்கள் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பில் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

சிறுவர்களை துஷ்பிரயோக நடவடிக்கைக்கு உட்படுத்துவதற்கு நவீன கையடக்கத் தொலைபேசிகளை தேரர் வழங்கினார் என விசாரணையின்போது தெரிய வந்துள்ளது என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது. (ச-இ)

## பிறப்பு பதிவு செய்யாதோர் விசேட சேவையூடாக பதிவு

யாழ்ப்பாணம், ஜன. 14

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு உட்பட்ட பிரதேச செயலர் பிரிவுகளில் இதுவரை பிறப்பு பதிவு செய்யாத சிறுவர்கள் மற்றும் ஏனையவர்களுக்கு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் பதிவுகள் முன்னெடுக்கப்பட்டன.

யாழ். மாவட்டத்தில் பிறப்பு பதிவு செய்யாத சிறுவர்கள் மற்றும் ஏனையோரை அடையாளம் கண்டு பதிவு செய்ய மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டமைக்கு அமைவாக இந்த விசேட சேவை ஒழுங்குபடுத்தப்பட்டது.

இந்தச் சேவையில் 31 பேருக்கு பதிவாளர் நாயகம் திணைக்களத்தால் பிறப்பு பதிவு மேற்கொள்ளப்பட்டது. இந்த விசேட சேவையை தவறவிட்டோர் மற்றும் பிரதேச மட்ட உத்தியோகத்தர்கள் தங்களது பிரிவில் பிறப்பு பதிவு செய்யாதோரை இனங்கண்டு எதிர்வரும் மார்ச் மாதம் 16ஆம் திகதி ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சேவையில் பதிவை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட பதில் மாவட்டச் செயலர் வலியுறுத்தினார். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சி பலன்கள் 2023



மனித வாழ்வுக்கு ஓர் அர்த்தத்தை ஏற்படுத்தும் கிரக மூர்த்தி சனீஸ்வரர். கிரகங்களில் மெல்ல நகர்பவர். நீதிமானாகச் செயற்பட்டு அவரவரின் முன்வினைகளுக்கு ஏற்ப உரிய பலாபலன்களைக் கொடுத்து, மனித வாழ்வுக்கு ஓர் அர்த்தத்தை ஏற்படுத்தும் கிரக மூர்த்தி சனீஸ்வரர்.

'ஏழரைச் சனி' என்றதும் பயம் கொள்ளத் தேவையில்லை. அப்படியே அஷ்டமத்துச் சனி, ஜன்மச் சனி போன்ற நிலைகளை எண்ணியும் கலங்க வேண்டியதில்லை. சனி பகவான் நம் வினைகளைக் கரைக்க அருள்செய்பவர்; இன்பதுன்பங்களை வினைப் படி செயற்படுத்தி வாழவைப்பவர்.

**நிகழும் சுபகிருது வருடம் தை மாதம் 3ஆம் நாள் (17.01.2023) செவ்வாய்க் கிழமை அன்று (திருக்கணிதப் பஞ்சாங்கப்படி), தன் சொந்த வீடான மகர ராசியிலிருந்து மற்றொரு சொந்தவீடான கும்பத்துக்கு பெயர்ச்சி ஆகிறார் சனிபகவான்.** இதனால் தனுசு ராசிக்கு ஏழரைச் சனி காலகட்டம் நிறைவடைகிறது. மீன ராசிக்கு ஏழரைச் சனி தொடங்குகிறது. மகர ராசியினருக்கு ஜன்மச்சனி விலகு கிறது.




இந்த சனிப்பெயர்ச்சியில் கடக ராசி நேயர்களுக்கு அஷ்ட மத்துச் சனியாக வருகிறார் சனி பகவான். தைரியம், தன்னம்பிக்கை அதிகம் கொண்ட கடக ராசியினர் எப்போதும் அடுத்த நிலைக்கு முன்னேறத் துடிப்பார்கள். கடக ராசிக்கு இதுவரை நடந்த கண்டக சனி முடிந்து தற்போது அஷ்டம சனி நடக்க உள்ளது.

கடக ராசிக்கு 8ஆம் வீடான அஷ்டம ஸ்தானத்தில் சனி பகவான் அமர்வதால் எதிலும் சற்று நிதானமாக நடந்து கொண்டாலே பல பிரச்சினைகளிலிருந்து விடுபட்டுவிடலாம்.

உத்தியோகத்தில் பணிச்சுமை இருந்தாலும் உங்களுக்கு அடுத்த நிலைக்கு உயர்த்தக்கூடியதாக இருக்கும்.

ஜனவரி 17இல் நடக்கும் சனிப்பெயர்ச்சியால் செவ்வாய் ஆளக்கூடிய அவிட்டம் 3ஆம் பாதத்துக்குச் செல்லும் போது பேச்சையும், கோபத்தையும் கட்டுப்படுத்த வேண்டும். நிதானமாகச் செயற்படவும்.

சனியின் அம்சமான தொழில் ஸ்தனத்திலேயே ராகு இருப்பதால் கெடுபலன் உண்டாகாது. தொழில் தான் வளரும். ஆனால் சற்று பணிச்சுமை, அலைச்சல் இருக்கும்.

திருமண தடைகள் நீங்கும். முயற்சிகள் வெற்றி அடையும். ஏனெனில் குரு 9ல் இருப்பார் பின்னர் 10ல் செல்லும் போது திருமண யோகம் உண்டாகும்.

அஷ்டம சனியால் சிலருக்கு வம்பு, வழக்கு ஏற்பட்டாலும், அதில் நல்ல தீர்வும் கிடைக்கும். ஆரோக்கியம் மேம்படும். கணவன் மனைவி இடையே உள்ள பிரச்சினைகள் தீரும்.

நெருங்கிய உறவுகள் இடையே சிறுசிறு சண்டைகள் வர லாம்; பெரிதுபடுத்தவேண்டாம்.

**பெண்களுக்கு:** எண்ணங்களிலும் செயல்களிலும் கவனம் தேவை. குடும் பத்தில் கணவன் - மனைவிக்கு இடையே மூன்றாவது நபரின் தலையீட் டால் குழப்பங்கள் வர வாய்ப்புகள் உண்டு. சகோதர, சகோதரிகளிடம் அன்பாக இருங்கள். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு அதிகமான பொறுப்புகள் வரலாம். அலைச்சலும் அதிகம் இருக்கும்.

**மாணவர்களுக்கு:** படிப்பில் நல்ல முன்னேற்றம் வரும். சோம்பேறித் தனத்தை சற்று ஒத்திவைத்தால், எண்ணங்கள் நிறைவேறும். விளையாட் டுத் துறையில் சாதனை செய்யலாம். ஆசிரியர்களிடத்தில் நட்பு வைத்துக் கொள்வது நல்லது. வியாழக்கிழமைகளில் ஆஞ்சநேயரை வழிபட்டால், தடைகள் நிவர்த்தி ஆகும்.


**உத்தியோகத்தர்களுக்கு:** வேலை மாற்றத்தை எதிர்பார்த்தவர்களுக்கு நல்ல மாற்றம் ஏற்படும். வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். வங்கி ஊழியர்கள் பண விவகாரங்களில் எச்சரிக்கையுடன் இருக்கவும்.

**வியாபாரிகளுக்கு:** நல்ல முன்னேற்றம் உண்டு. புதிய வியாபார யோசனை களைச் செயற்படுத்தலாம். சிறுதொழில் செய்பவர்களுக்கு நல்ல காலம் இது.

**பரிகாரம்: சனிக்கிழமை தோறும் அன்னதானம் செய்யவும். சனி பகவானைத் தரிசனம் செய்வது நல்லது.**

# இன்றைய நாள் (ராசிபலன்)





**மேடம்:** மகிழ்ச்சியான நாள். மனதில் தைரியம் அதிகரிக்கும். எடுத்த காரி யத்தைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர் கள். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லை கள் நீங்கும்.



**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்க வும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. நண்பர்கள்மூலம்பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.



**மிதுனம்:** புதிய முயற்சிகளை தொடங குவது சாதகமாக முடியும். தாய்வழி உறவினர்களால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.



**கடகம்:** பிள்ளைகள் வகையில் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். ஆதாயம் ஏற்படும். சிலருக்கு எதிர்பா ராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. செலவு செய்ய நேரிடும்.



உற்சாகமான நாள். கணவன் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடி யும். உங்கள் முயற்சிக்கு ஆதரவு கிடைப் பது மகிழ்ச்சி தரும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.



**கன்னி:** பணவரவு திருப்தி தரும். உடல்நலனில் கவனம் தேவை. எதிர் பாராத செலவுகள் ஏற்படும். மனதில் அடிக்கடி குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். சங்கடங்கள் ஏற்படக்கூடும்.



**துலாம்:** மனதில் உற்சாகம் ஏற்படும். காரியங்களில் அனுகூலம் உண்டா கும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்க ளுடன் அனுசரணையாக நடந்து கொள்ளவும். ஆதாயம் உண்டாகும்.



**விருச்சிகம்:** காரியங்கள் அனுகூல மாகும். தந்தையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும். எதிர் பார்த்த பண உதவி கிடைப்பதற்கும் வாய்ப்பு உண்டு.



**தனுசு:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். மனதில் உற் சாகம் அதிகரிக்கும். விறுவிறுப்பா கவும் பரபரப்பாகவும் செயற்படுவீர் கள். கருத்து வேறுபாடு நீங்கும்.



**மகரம்:** பணவரவு இருந்தாலும் திடீர் செலவுகளும் ஏற்படும். எதிர் பார்த்த காரியம் இழுபறியாகும். மனவருத்தம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.



**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சகோதரர்களுக்காக செலவு செய்ய நேரிடும். மற்றவர்களுடன் வீண் விவாதத்தில் ஈடுபட வேண்டாம்.



**மீனம்:** காரியங்கள் அனுகூலமாகும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தந்தையின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் நீங்கும்.

# கோண்டாவில் சபரிமலையில் விரத நிறைவுநாள் உற்சவம்

யழ்ப்பாணம், ஜன. 14

'ஈழத்துச் சபரிமலை' எனப் போற் றிச் சிறப்பிக்கப்படும் கோண் டாவில் ஈழத்துச் சபரிமலை ஐயப்பன் ஆலய வருடாந்த மகரஜோதி மண்டல விரதப் பெருவிழாவின் நிறைவுநாள் உற்சவம் இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெற வுள்ளது.

விசேட மகரஜோதிப் பூசை மற் றும் பெரிய மடைப்பூசை ஆகிய வற்றைத் தொடர்ந்து சுவாமி வீதி உலாவந்து திருக்காட்சி அருளவுள்ளார். தைப்பொங்கல் நாளான நாளை ஞாயிற்றுக்கி ழமை முற்பகல் 10 மணியள வில் ஆலய முன்றிலில் விசேட பொங்கல், பூசை வழிபாடுகள் நடைபெறும்.

அன்றையதினம் மாலை 6 மணிக்கு ஐயப்ப அடியவர் களின் புனித விரத மாலை கழற் றும் நிகழ்வும் நடைபெறவுள்ளது என ஆலயக் குரு முதல்வர் அறிவித்துள்ளார். (ச-66)

# வாழைப்பழ விலை சடுதியாக உயர்வு!

யாழ்ப்பாணம், ஜன. 14

யாழ். குடாநாட்டில் வாழைப்பழத்தின் விலை திடீரென உயர்வ டைந்துள்ளது என நுகர்வோரால் தெரிவிக்கப்படுகிறது.

கதலி வாழைப்பழம் கிலோ 200 ரூபாவுக்கும் அதிகமாக விற்பனை செய்யப்படுகிறது.

அண்மையில் பெய்த மழை மற்றும் புயல் காற்றால் இந்த திடீர் விலையுயர்வு நிகழ்ந்துள்ளது என வியாபாரிகள் தெரிவித்தனர். இதேவேளை தைத்திருநாள் மற்றும் ஆலய உற்சவங்கள் இடம்பெற்று வருகின்றமையால் வாழைப்பழத்தின் தேவைப்பாடு அதிகரித்துள்ளது. இதுவும் இந்த விலையுயர்வுக்கு ஒரு கார ணமாக அமைந்துள்ளது. (ச-17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கனேடியத் தடையின் பின்புலம் பொருளாதாரக் குற்றங்களல்ல!

'கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த குறுகிய காலப்பகுதியில், தவறான தீர்மானங்கள் மூலமாக நாட்டைப் பட்டினிக்குள் தள்ளினார். இனவாதத்தைத் தூண்டினார். இன முறுகலை ஏற்படுத்தினார். கோத்தாபய ராஜபக்சவை கனடா மட்டுமல்ல உலகநாடுகளும் நிராகரிக்க வேண்டும்' என்று பொரிந்து தள்ளியிருக்கின்றார் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவருமான ரிஷாத் பதியுதீன்.

முன்னாள் ஜனாதிபதிகளான கோத்தாபய ராஜபக்ச, மஹிந்த ராஜபக்ச உள்ளிட்ட நான்கு பேருக்கு எதிராக கனேடிய அரசாங்கம் அண்மையில் பொருளாதாரத் தடைகளை அறிவித்தது. 2009ஆம் ஆண்டு இறுதிப்போரின்போதும் அதற்கு முன்னதாகவும் மேற்படி தரப்பினர் இழைத்ததாகச் சொல்லப்படும் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் மற்றும் அந்தக் குற்றச்சாட்டுக்கள் மீதான நம்பகத்தன்மை ஆகியவற்றை அடுத்தே கனேடிய அரசாங்கம் இந்தப் பொருளாதாரத் தடைகளை கோத்தாபய தரப்பினருக்கு விதித்தது. இந்தக் கனேடியத் தடைகளை ஆதாரமாக வைத்தே மேற்படி கருத்தை முன்வைத்திருக்கின்றார் ரிஷாத்.


ரிஷாத் கூறுவதைப்போன்று கோத்தாபய சர்வாதிகாரப் போக்குடையவர்தான். மன்னிக்கப்படக்கூடாதவர்தான். அவர் இந்த நாட்டு மக்களை பஞ்சத்துக்குள்ளும் பட்டினிக்குள்ளும் தனது தவறானதும் – சர்வாதிகாரமானதுமான நடவடிக்கைகளால் தள்ளினார்தான். ஆனால், கனடா அரசாங்கம் இராணுவப் பின்புலமுடைய இந்த நால்வருக்கும் விதித்த தடைகள் எதற்காக என்ற புரிதலை ரிஷாத் முதலில் வளர்த்துக்கொள்ள வேண்டும். பொருளாதாரக் குற்றங்களுக்காகவோ, வினைத்திறனற்ற நிர்வாகத்துக் காகவோ இந்தத் தடைகளை கனடா அரசாங்கம் கோத்தாபயவுக்கு விதிக்கவில்லை. 2009 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னரும் இடம்பெற்றதாகச் சொல்லப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்களுக்காகத்தான் இந்தப் பொருளாதாரத் தடைகள் கோத்தாபய, மஹிந்த உள்ளிட்ட தரப்பினருக்கு விதிக்கப்பட்டது. ஆக, இந்தத் தடைக்குப் பின்னால் இருப்பது முழுக்கமுழுக்க மனித உரிமைகள் மீறலும் – போர்க்குற்றங்களும்தான். இவ்வாறிருக்கையில் இந்தப் பாரதூரமான பின்புலத்தை, பல தமிழர்களின் வேதனையை – நீதிக்கான எதிர்பார்ப்பை, 'பொருளாதார நலிவு நிலை' என்ற மிகக்குறுகிய சித்தாந்தத்துக்குள் அடக்கிவிடுவதற்கு ரிஷாத்துக்கு மட்டுமல்ல எவருக்கும் அருகதையில்லை. அந்த அணுகலை ஒருபோதும் அனுமதிக்கவும் முடியாது.

தமிழர்களின் இனப்பிரச்சினையை – ஈழப்போராட்டத்தை நலிவடையச் செய்யும் முனைப்பில் ரிஷாத் நடந்துகொள்வது இதுவொன்றும் முதல்முறையல்ல. 'ஓர் இனம் தனிநாடு கேட்டுப் போராடியதால், இன்று ஒட்டுமொத்த நாடுமே பல்லாண்டுகால பொருளாதாரப் பின்னடைவைச் சந்தித்துள்ளது' என்ற சாரப்பட்டதான கருத்தை நாடாளுமன்றத்தில் பட்டவர்த்தனமாக முன்வைத்தவர் இதே ரிஷாத் பதியூதீன்தான். ஆனால், அதன்பின்னர் எந்தப் பேரினவாதத்துக்கு எதிராக தமிழர்கள் போராடினார்களோ, எந்தப் பேரினவாதத்தை வேரறுக்க வேண்டும் என்பதை தமிழர்கள் தாகமாகக் கொண்டிருந்தார்களோ அதே பேரினவாதச் சிந்தாந்தமும் அதை தங்குதடையின்றி முன்னெடுக்க ஏதுவாகவிருந்த சட்டஏற்பாடுகளும் ரிஷாத்தையும் சிறையிட்டது. சிறையிலிருந்து மீண்ட பின்னர் ராஜபக்சக்களின் முகாம்களுக்கு மீண்டும் திரும்பி அமைச்சுப் பதவிகளை இனியும் பெற முடியாது என்பது உறுதியான பின்னர் தற்போது இவ்வாறான மடைமாற்றும் கருத்தூட்ட வியூகத்தை ரிஷாத் கைக்கொள்வதெல்லாம் கடைகெட்ட அரசியல்.

சிறுபான்மையினர் என்ற வகையில் தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றுபட்டாலும், இந்த இரண்டு இனங்களினதும் அரசியல் ஒன்றல்ல. அவை வெவ்வேறானவை. வெவ்வேறு சிந்தனைத் தளங்களைக் கொண்டவை. அதனால், இந்த இரு இனங்களையும் சார்ந்தோரின் அரசியல் பாங்கானது பரஸ்பரம் ஒன்றையொன்று மதிக்கின்ற வகையிலும் ஒன்றின் வேணவாக்களை மற்றையது அனுசரிக்கின்ற வகையிலும் அமைவதுதான் இரு சமூகங்களுக்கும் அர்த்தபூர்வமானதாகவும் இருக்கும். இந்த அரசியல் பண்பை – அடிப்படைக் கலாசாரத்தை ரிஷாத் வளர்த்துக்கொள்ளட்டும்.

நாளொரு நல்வார்த்தை

"எந்த வீட்டில் அநாதைகளுக்கு அரவணைப்பு கிடைக்கிறதோ, அந்த வீடுதான் உலகின் மிகச் சிறந்த வீடு" – கால்ரீட்ஜ்





# அரசியல்கைதிகளுக்காக பல்கலையில் வீதிநாடகம்

### தேசிய பொங்கல் நிகழ்வை புறக்கணிக்குமாறும் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 14

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினருடன், குரலற்றவர்களின் குரல் அமைப்பினர் இணைந்து வீதி நாடகமொன்றினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தினுள் நேற்று முன்னெடுத்தனர்.

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய கேட்போர்கூட வளாகத்துக்கு முன்பாக குறித்த வீதி விழிப்புணர்வு நாடகம் முன்னெடுக்கப்பட்டது.

இதனையடுத்து குரலற்றவர்களின் குரல் அமைப்பின் இணைப்பாளர் முருகையா கோமகன் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்ததாவது:

இந்த முறை தைப்பொங்கலுக்கு எமது அரசியல்கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என நம்பிய பொழுதும் நாம் ஏமாற்றப்பட்டுள்ளோம். இதனை மையப்படுத்தியே இந்த வீதி நாடகம் அரங்கேற்றப்படுகின்றது. தமது உறவுகள் அரசியல்கைதிகளாக அடைக்கப்பட்டிருக்கையில், பொங்கல் பண்டிகையைக் கொண்டாடாது அங்கலாய்ப்போரின் மனநிலையையும், அரசியல்கைதிகளின் மனோநிலையையும் இந்த நாடக ஆற்றுகை மூலமாக வெளிப்படுத்தியுள்ளோம்.

அரசியல் கைதிகள் விடுதலையின்றி வாழும் சூழலில், இங்கு நடைபெற இருக்கின்ற தேசிய பொங்கல் விழாவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வருகை தரவுள்ளார். அவர் கலந்துகொண்டு தேசிய பொங்கல் விழாவை தமிழ் மக்களும், தமிழ் மக்களின் பிரதிநிதிகளும் முற்றாக நிராகரிக்கவேண்டும். இதன்மூலம் அரசியல்கைதிகளை விடுவித்தால்தான் எங்களுக்குப் பொங்கல் என்ற செய்தியை நாம் சொல்ல வேண்டும் - என்றார்.

இந்த நாடக ஆற்றுகையில், குரலற்றவர்களின் குரல் அமைப்பின் இணைப்பாளர் முருகையா கோமகன், யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் அழகராசா விஜயகுமார், செயலாளர் யாமீன், கலைப்பீட மாணவர் ஒன்றிய தலைவர் ஜெல்சின், முன்னாள் அரசியல் கைதிகள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள் என பெருமளவானோர் கலந்துகொண்டனர். (ம-125)

| நாளை | 15.01.2023 ஞாயிற்றுக்கிழமை | சுபநேரம் : 09.34 - 11.04<br>ராகுகாலம் : 05.04 - 06.34 |
|---|---|---|
| | தை 01 | தைப்பொங்கல் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுரைத் தொகுதி வெளியீடு நாளை

யாழ்ப்பாணம், ஜன. 14

எழுத்தாளர் சி.உதய குமார் எழுதிய 'கற்பித்தலில் மொழியும் கணித நுண்மையும்' கல்வியியல்சார் கட்டுரைத் தொகுதி வெளியீட்டு நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு வல்வெட்டித்துறை சமரபாகு கலை இலக்கிய மன்றத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் தி.சுபாகரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஓய்வுநிலை விரிவுரையாளர் சி.குணசீலன் நூலின் முதற்பிரதியை பெற்றுக்கொள்வார். (ச)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணம், ஜன. 14

ஆனைக்கோட்டை ஐக்கிய சனசமூக நிலையத்தின் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம)

## நிர்வாகத் தெரிவு

வடக்கு மாகாண சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடலும் பிரிவுபசார நிகழ்வும் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் அண்மையில் நடைபெற்றது.

தலைவராக தி.கணேஷ்ராஜ், செயலாளராக வ.சுரேஷ்குமார், பொருளாளராக திருமதி அ.அருந்தவராசா, உபதலைவராக ந.தசரதராஜ குமாரன், உபதலைவராக திருமதி ஆ.தினேஸ், உபசெயலாளராக திருமதி மு.விஜயகுமாரி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ம-14,13)

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், ஜன. 14

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தில் திருவாசக முற்றோதல் நிகழ்வு இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளது என ஆலய அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர். (ச)

### தேவை

திருமண சேவை அலுவலகத்துக்கு அனுபவமுள்ள / அனுபவமற்ற பெண்கள் தேவை.

077 427 1512

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள யப்பான் சுப்பர் கப் 50CC

தொடர்பு

077 9420 568

### காணவில்லை

ஓட்டுமடம் மற்றும் தட்டாதெருப் பகுதியில் மேய்ச்சலுக்குச் சென்ற மா - வெள்ளை நிற மாடு (காதில் வெட்டுக்காயம், வலது பக்க கால் குழம்பு நீளம், வளைவு கொம்பு) மற்றும் சிவப்பு நிற மாடு (இடது காலில் வெள்ளை நிறம், மொட்டைக் கொம்பு) கடந்த 20 ஆம் திகதியில் இருந்து காணவில்லை. கண்டவர்கள் தொடர்பு கொள்ளவும்.

சிவகுமார் (வள்ளி)

077 918 4174

(CS 22889)(4.6)

### வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தல்

ARCD CARE AND BE FAIR

எமது சங்கத்தின் 14 ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் **29.01.2023 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு வைத்திய கலாநிதி ந.சிவராஜா ஞாபகார்த்த மண்டபத்தில் சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி சு.சிவபாதமூர்த்தி** அவர்கள் தலைமையில் நடைபெறும். இக் கூட்டத்துக்கு அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**வலுவிழந்தோர் புனர்வாழ்வுச்சங்கம்,**
**(Association For Rehabilitation of the Disabled)**
**47/2, ஆடியபாதம் வீதி,**
**திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.**

**திருமதி சுஜீவா சிவதாஸ்**
**செயலாளர்.**

(CS 22807) (4.6)

### சேவைநலன் பாராட்டு




யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில்
**கடந்த 30 வருடங்களாக**
**தாதிய உத்தியோகத்தராகவும்,**
**பொறுப்பு தாதிய உத்தியோகத்தராகவும்**
கடமையாற்றி **14.01.2023** இன்றுடன்
ஓய்வுபெற்றுச் செல்லும்
**திருமதி மங்கையற்கரசி விக்னேஸ்வரன்**
அவர்கள் ஓய்வுக்காலத்தில் சிறந்த
தேக ஆரோக்கியத்துடன் வாழ
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வாழ்த்துவோர்:-**
**தாதிய நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்,**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

(CS 22789)(4.6)

# ARE YOU INTERESTED IN STUDYING ABROAD OR MIGRATING?



Learn how to be successful in
**IELTS**
FREE WORKSHOP

**21st Jan'23 - Listening & Speaking**
**22nd Jan'23 - Reading & Writing**

**9.00am to 12.00noon**

**Art Seminar Hall, University of Jaffna**

**Our desire is to show ways to achieve best scores**

Due to limited spaces available, participation is through REGISTRATIONS ONLY

**Call: 077 222 3178**

Organised by:
Edlocate (Pvt) Ltd, C/O IIS City Campus,
No 200, Sivan Pannai Road, Jaffna

edlocate
Reach Light Beyond Borders
www.edlocate.lk


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



தைப்பொங்கலை முன்னிட்டு நல்லைக்கந்தன் தண்ணீர்ப் பந்தல் அமைப்பின் ஏற்பாட்டில் உதவும் கரங்கள் செயற்றிட்டம் ஊடாக பொருளாதாரம் நலிவுற்ற குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு பொங்கல் பொருள்கள் வழங் கப்படுகிறது. முதற்கட்டமாக நல்லூர் மற்றும் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடிப் பகுதி யைச் சேர்ந்த 50 குடும்பங்களுக்கு பொங்கல் பொருள்கள் கையளிக்கப்பட்டன. (ச-66)



தாயகம் அறக்கொடை நிறுவனத்தால் வன்னி விழிப்பு ணர்வற்றோர் சங்கத்தின் 130 குடும்பங்களுக்கு 2 லட் சத்து 80 ஆயிரத்து 250 ரூபா நிதியில் பொங்கல் பானை மற்றும் பொங்கல் பொதிகள் அன்மையில் வழங்கப் பட்டன. (ம-14)



தைப்பொங்கல் பண்டிகையை முன் னிட்டு நேற்று சாவகச்சேரிச் சந்தை யில் பொங்கல் பொருள்கள் மற்றும் பட்டாசு வகைகளின் விற்பனைகள் இடம்பெற்றன. (ம-9)


**33ஆம் ஆண்டு நினைவுநாள்**



அமரர் நடராஜா
சந்திரராஜா (போஸ்)
(முன்னாள் உரிமையாளர் -
"குகன் ஸ்ரோர்ஸ்" தலவாக்கலை)

மண்ணில்
20.02.1948

விண்ணில்
19.12.1989

திதி:- 14.01.2023

ஆண்டுகள் பல போகும் அகிலமும் உருண்டு ஓடும்
ஆயினும் உங்கள் அன்பு அகலுமா நெஞ்சைவிட்டு
இயற்கையின் அசைவுகளில் உங்கள்
உணர்வுகளை நுகர்ந்து
உங்கள் பாதம் மலர் தூவி வணங்குகின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

பலாலி,
கோண்டாவில் கிழக்கு.

(CS 22798) 4,6)

**அம்மாவின் விண்ணக வாழ்வில்**
**19ஆம் ஆண்டு**



இறப்பு
16.01.2004

**திருமதி லில்லி தேவசகாயம்**

கண்ணின் மணியாய் அன்புடன்
அரவணைத்து எமைக்காத்து
அவனிதனில் சீரும் சிறப்புமாய்
நாம் வாழ கலங்கரை விளக்காய்
ஒளி தந்து வழிகாட்டிய லில்லி மலரே
எங்கள் மனங்களில் காலங்கள் தோறும்
வாடாமல் சுகந்த மணம் பரப்ப
இறை அருள் வேண்டி நிற்கும்.

அன்பு பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

இல.28, றக்கா லேன்,
சுண்டுக்குளி.

(CS 422808) (3/6)

**கண்ணீர் அஞ்சலி**



மலர்வு : 05.10.1942 உதிர்வு: 12.01.2023

**சுந்தரம் டிவகலாலா**

முன்னாள் யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
வடக்கு கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு
மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர், ஆறுதல்
நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர், வடமாகாண
முன்பள்ளி ஆசிரியர் தொழிற்சங்கத்தின்போசகர்)

முன்பள்ளி கல்வி விருத்திக்கும். முன்பள்ளி ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்கும் வித்திட்ட பெருமைக்குரியவர். முன்பள்ளி ஆசிரியருக்கான தொழிற் தகைமை டிப்ளோமா பட்டத்தை வழங்கி ஆசிரியர்களுக்கான அங்கீகாரத்தை தந்த பெருமைக்குரிய எமது தந்தையார் எம்மைவிட்டு பிரிந்தார். அவருடைய சேவையை தொடர்வோம் என்பதுடன் எங்களுடைய இதயம் கனிந்த அஞ்சலியையும் வணக்கத்தையும் தெரிவிக்கின்றோம்.

வடலிகள் வானுயரும்

நிர்வாக சபை உறுப்பினர்கள்,
முன்பள்ளி ஆசிரியர்கள்
வடமாகாண முன்பள்ளி ஆசிரியர் தொழிற்சங்கம்

**நினைவு தின அழைப்பும் நன்றி நவிலலும்**

31ஆம் நாள் நினைவு | 1ஆம் ஆண்டு நினைவு





மண்ணில் 09.09.1948 விண்ணில் 11.12.2022
**திரு. கனகசுந்தரம் அருட்செல்வம்**
(ஓய்வுபெற்ற சென் ஜோன்ஸ் கல்லூரி,
அலுவலக உத்தியோகத்தர்)

மண்ணில் 16.07.1955 விண்ணில் 02.01.2022
**திருமதி ரத்தினவதனா அருட்செல்வம்**
(ஓய்வுபெற்ற ஆசிரியை,
யாழ். பரியோவான் கல்லூரி)

*"கிறிஸ்துவுடனே கூட நாம் மரித்தோமானால்*
*அவருடனே கூடப் பிழைத்தும் இருப்போம். (ரோமர் 6;8)*

எமது குடும்பத்தின் மூத்த மருமகன் அமரர் கனகசுந்தரம் அருட்செல்வம் மற்றும் மூத்த மகள் அமரர் ரத்தினவதனா அருட்செல்வம் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து நேரிலும் வெளியூர் உள்ளூரிலிருந்தும் தொலைபேசி ஊடாக ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் இவர்களின் நினைவாக இன்று (14.01.2023) சனிக்கிழமை அன்னார்களது இல்லத்தில் இறைவனுக்கு நன்றி கூறும் ஆராதனையும், மதிய போசனமும் முற்பகல் 11.30 மணியளவில் நடைபெறும். தங்களையும் குடும்ப சமேதராய் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"இரத்தினவாசம்"
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

குடும்பத்தினர்
021 227 1194, 077 425 7960

(CS 22343) (3/6)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கட்டுப்பாட்டையிழந்து இ.போ.ச. பஸ் விபத்து



யாழ்ப்பாணம், ஜன. 14

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்து ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியது.

இந்த விபத்துச் சம்பவம் சிறுப்பிட்டிப் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பருத்தித்துறை 750 ஆம் இலக்க வழித்தட பஸ் ஒன்று பருத்தித்துறை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த வேளை, சிறுப்பிட்டிப் பகுதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து, அங்குள்ள வாகன திருத்தகத்துக்குள் மோதி விபத்துக்குள்ளானது. விபத்தில் பஸ்ஸில் பயணித்தோருக்கு எதுவித காயங்களும் ஏற்படவில்லை. எனினும் விபத்துக்குள்ளான பஸ்ஸும் வாகன திருந்தகத்துக்குள் நின்ற வாகனங்களும் சேதமடைந்துள்ளன. விபத்துத் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(ஒ-14.20)



சாவகச்சேரியில் அமைந்துள்ள லவ்லி கிறீம் ஹவுஸின் நிதி அனுசரணையில் மீசாலை வடக்கு வேம்பிராய் கான்றைச் சாட்டி ஆலாக்கிரக பூதவரத விநாயகர் ஆலயத்தில் 50 பேருக்கு பொங்கல் பானை மற்றும் பொங்கல் பொருள்கள் நேற்றுமுந்தினம் வியாழக்கிழமை வழங்கப்பட்டன.

(ம-14,159)


## மீளா உலகுக்கு நீள் பயணம் சென்றுவிட்ட ...

இருள் சூழ்ந்த இடரார்ந்த காலத்திலும் வடக்குக் கிழக்குக் கல்விக் கப்பலைச் சரியவிடாது நிமிர்த்தி ஓட்டிய தண்டையலார்.....

ஈழத்தமிழ்த் தேசியக் கலை வடிவத்துக்கும், கலைஞர்களுக்கும் ஆதார சக்தியாக நின்ற "செவ்வியல்சார் அழகியல் சிந்தனையாளர்"....

இலங்கை நிர்வாகசேவையின் "ஒய்வுநிலை பெரும் பேராளுமை"..

"மனித நேயம் மிக்க மாமனிதர்"....



உயர் மாண்பு
# சுந்தரம் டிவகலாலா
அவர்களது
ஆன்மா நித்திய ஆறுதல் பெற
இறைவனடி தாழ்ந்து யாசித்து நிற்கின்றோம்.

கலைஞர் வேல் ஆனந்தன் ஆடலணியினர்.

(CS 22811)(3/6)



## குடியியல் நடைமுறைக் கோவை பிரிவு 16இன் கீழான அறிவித்தல்
### பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

1.துரைசிங்கம் குருபரன்,
தலைவர்

2.அரியரட்ணம் கதிர்ஷன்,
உபசெயலாளர்
இருவரும்
வல்வெட்டி ஒற்றுமை
விளையாட்டுக் கழகம்,
இந்து பாடசாலை வீதி,
வல்வெட்டி

வழக்காளிகள்-

வழக்கு இல.: நானாவிதம் /1618/2023
பெறுமதி : ரூ.1,000,000/-
நடைமுறை : சாதாரணம்

எதிர்

1. பாலகிருஷ்ணன் கஜேந்திரன்
இந்திரஅம்மன்
கோவில்பக்கம்,
துன்னாலை, கரவெட்டி.

2.சின்னராசா கார்த்தீபன்,
இமையாணன் வடக்கு,
உடுப்பிட்டி.

3.ஈஸ்வரானந்தன் தயாரூபன்,
பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
கரவெட்டி.

எதிராளிகள் -

வல்வெட்டி ஒற்றுமை விளையாட்டுக் கழகம் - கூட்டிணைக்கப்படாத அமைப்பின் அங்கத்தவர்களுக்கு.

மேற்குறித்த வழக்கானது பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வழக்காளிகளால் மேலே பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் எதிராளிகளுக்கு எதிராகப் பின்வரும் நிவாரணங்களை வேண்டித் தாக்கல் செய்யப்பட்டுள்ளது:

i) 1ம் மற்றும் 2ம் எதிராளிகள், வல்வெட்டி ஒற்றுமை விளையாட்டுக்கழக யாப்பு விதிகளை மீறியும், தன்னிச்சையாகவும் சட்ட விரோதமாகவும் செயற்பட்டுள்ளனர் என்று பிரகடனம் செய்யும் கட்டளையும் தீர்ப்பும் வழங்க வேண்டும் எனவும்,

ii) எவ்வகையிலும் கழக யாப்பு விதிகளை மீறிச் செயற்படுவதிலிருந்து, குறிப்பாக தன்னிச்சையாக கூட்டம் அல்லது விசேடகூட்டம் அல்லது பொதுக் கூட்டம் எதனையும் கூட்டுவதிலிருந்தும் மற்றும் / அல்லது பங்கு பற்றுவதிலிருந்தும் 1ம் மற்றும் 2 எதிராளிகளைத் தடை செய்யும் நிரந்தர தடைக் கட்டளை ஒன்றை வழங்க வேண்டும் எனவும்,

iii) இவ்வழக்கு முடிவடையும்வரை, எவ்வகையிலும் கழக யாப்பு விதிகளை மீறிச் செயற்படுவதிலிருந்து, குறிப்பாக தன்னிச்சையாக கூட்டம் அல்லது விசேட கூட்டம் அல்லது பொதுக்கூட்டம் எதனையும் கூட்டுவதிலிருந்தும் மற்றும் / அல்லது பங்குபற்றுவதிலிருந்தும் 1ம் மற்றும் 2ம் எதிராளிகளைத் தடை செய்யும் இடைக்காலத் தடைக்கட்டளை ஒன்றை வழங்கவேண்டும் எனவும்.

iv) குறித்த இடைக்காலத் தடைக்கட்டளைக்கான விண்ணப்பம் மீதான விசாரணை நிறைவுபெற்று தீர்மானிக்கப்படுவதற்கு முன்னதாக இவ் வழக்கின் அவசிய தேவை கருதி, எவ்வகையிலும் கழக யாப்பு விதிகளை மீறிச் செயற்படுவதிலிருந்து, குறிப்பாக 2023.01.05ம் திகதியன்று கூட்டம் அல்லது விசேட கூட்டம் அல்லது பொதுக்கூட்டம் எதனையும் கூட்டுவதிலிருந்தும் மற்றும்/ அல்லது பங்கு பற்றுவதிலிருந்தும் 1ம் மற்றும் 2ம் எதிராளிகளை உடனடியாகத் தடைசெய்யும் கட்டாணை ஒன்றை வழங்கவேண்டும் எனவும்,

v) குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் 16ம் பிரிவின் கீழ் இவ் வழக்குத் தொடர்பான அறிவித்தலை பத்திரிகையில் அல்லது நீதிமன்றம் கட்டளையிடும் பிரகாரம் பிரசுரிப்பதற்கான கட்டளையும்,

vi) வழக்குச் செலவும் மற்றும்

vii) கௌரவமன்றிற்கு நீதியும் நியாயமுமெனத் தோன்றும் பிற நிவாரணங்களும்.

இவ்வழக்கானது 2023. 01. 16ம் திகதியன்று திறந்தமன்றில் அழைக்கப்பட இருக்கின்ற தென்றும் வல்வெட்டி ஒற்றுமை விளையாட்டுக் கழகம் கூட்டிணைக்கப்படாத அமைப்பின் அங்கத்தவர்கள் எவராவது இவ்வழக்கில் அக்கறையுடையவராக இருப்பின் 2023.01.16 ம் திகதியன்று காலை 09.00 மணிக்கு தனிப்பட்ட ரீதியில் அல்லது சட்டத்தரணி ஊடாக கௌரவ மன்றில் தோன்றலாம் எனவும் இத்தால் பகிரங்க அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

2023ம் ஆண்டு ஜனவரி மாதம் 10ம் திகதி.

மன்றின் கட்டளைப்படி,

பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
பருத்தித்துறை.

வரைவு:
வழக்காளிகளின் சட்டத்தரணி.

(CS/48576)4,6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைக்...
ஒரு லட்சத்து 35 ஆயிரமாகக் குறைக்கப்படவுள்ளது. பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் விசேட அறிக்கையொன்றை விடுத்து இந்த அறிவித்தலை விடுத்துள்ளார். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு, இராணுவத்தின் பலம் மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சி ஆகியன ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றன. அவை ஒன்றாக இருந்த போதிலும் ஒன்றுடன் ஒன்று வெளிப்படையாகத் தென்படுவதில்லை. இராணுவச் செலவினம் என்பது தேசிய மற்றும் மனிதப் பாதுகாப்பை உறுதி செய்வதன் மூலம், பொருளாதார வளர்ச்சிக்கான வழிகளை ஏற்படுத்தும் மறைமுகமாகத் தூண்டப்படும் ஒரு அரச செலவினமாகும். இராணுவத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் தற்போது 2 லட்சத்து 783 ஆக இருந்தாலும், அது 2024ஆம் ஆண்டளவில் ஒரு லட்சத்து 35 ஆயிரமாக குறைக்கப்பட்டு 2030ஆம் ஆண்டளவில் அது ஒரு லட்சமாக சரி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. 2030ஆம் ஆண்டளவில் இலங்கையின் தேசிய பாதுகாப்பு நலன்களுக்கு இணையாக எந்த வொரு பாதுகாப்பு சவால்களையும் எதிர்கொள்ளும் வகையில் தொழில்நுட்ப ரீதியாகவும் தந்திரோபாய ரீதியாகவும் தகுதியான சமநிலையான இராணுவப் பலத்தை உருவாக்குவதே இந்த மூலோபாயத் திட்டத்தின் நோக்கமாகும் - என்றுள்ளது.

(அ-ஒ-44)

### தென்மராட்சிப் பாடசாலைகளின்

# அதிபர் வெற்றிடத்துக்கு விண்ணப்பங்கள் கோரல்

சாவகச்சேரி, ஜன. 14
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் காணப்படும் அதிபர் வெற்றிடங்களுக்கு வடமாகாண பாடசாலைகளில் குறைந்தது 3 வருடங்கள் கடமையாற்றக்கூடிய தரம் II மற்றும் தரம் III அதிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அதன்படி தென்மராட்சி கல்வி வலய 8 பாடசாலைகளின் அதிபர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தகைமையுள்ள அதிபர்கள் தமது வலயக் கல்வி அலுவலகத்தில் உரிய படிவத்தினைப் பெற்று எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும்.

வகை II பாடசாலையைச் சேர்ந்த மிருசுவில் அ.த.க.பாடசாலை, மட்டுவில் கமலாசனி வித்தியாலயம், மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம், தரம் III ஐச் சேர்ந்த கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயம், சரசாலை ஸ்ரீகணேச வித்தியாலயம், சாவகச்சேரி சக்தி அம்மன் த.க.பாடசாலை, சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை, சாவகச்சேரி றோ.க.த.க.பாடசாலை ஆகிய பாடசாலைகளில் காணப்படும் அதிபர் வெற்றிடங்களுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் அறிவித்துள்ளார்.

(ச-9)

# தொழிற்பயிற்சி கற்கைகள் விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஜன. 14
இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையால் 2023ஆம் ஆண்டின் முதலாம் அரையாண்டுக்கான முழு நேர கற்கைநெறிகள் கடந்த 2ஆம் திகதி அனைத்துப் பயிற்சி நிலையங்களிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
அதற்கமைய தகவல் தொடர்பாடல் தொழிநுட்பவியலாளர், கணினி வடிவமைப்பாளர், முச்சக்கரவண்டி திருத்துநர், மின்னிணைப்பாளர், பெண்கள் சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், அலுமினியம் பொருத்துநர், அறை பராமரிப்பாளர், உணவு மற்றும் குடிபானம் பரிமாறுபவர், வெதுப்பாளர், சமையலாளர், வரவேற்பாளர், கணினி வன்பொருள் திருத்துநர், கணினி பிரயோக உதவியாளர், குழந்தை பராமரிப்பாளர், நீர்க்குழாய் பொருத்துநர் போன்ற கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்தக் கற்கை நெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை என்.வி.கியூ. சான்றிதழுக்கான பயிற்சிநெறிகளாகும்.

(ச)

# மகளிர் தினத்தை முன்னிட்டு குறும்படம், ஒளிப்படப்போட்டி

யாழ்ப்பாணம், ஜன. 14
சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சால் 'பெண்களின் சமூக பொருளாதார மேம்பாட்டை முன்னிலைப்படுத்தல்' எனும் கருப்பொருளில் குறும்படம் மற்றும் புகைப்படப்போட்டி ஆகியவை நடத்தப்படவுள்ளன.
இதற்கென வடக்கு மாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட இலக்கியம், கலை, விளையாட்டு, ஊடகம், தொழில்முயற்சி உள்ளிட்ட பல்வேறுபட்ட துறைசார் பெண் சாதனையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
போட்டிகளில் பங்குபற்றவுள்ளோர் விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் மகளிர் விவகார அமைச்சு, இல. 4 புரூடி லேன், புங்கன்குளம் சந்தி அரியாலை, கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அல்லது அமைச்சின் மின்னஞ்சல் முகவரியான npminwa@gmail.com க்கு அனுப்பிவைக்கலாம்.
போட்டி நுழைவுக்கான விண்ணப்பம் மற்றும் விதிகளை 021 222 0883 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம் என வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சு அறிவித்துள்ளது.

(ச)



# மருதங்கேணியில் கோப்சிற்றி திறப்பு

யாழ்ப்பாணம், ஜன. 14
வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் கோப்சிற்றி கூட்டுறவு நகர் விற்பனை நிலையம் கடந்த புதன்கிழமை புதிதாகத் திறந்து வைக்கப்பட்டது.
மருதங்கேணியிலுள்ள சங்கத்தின் தலைமை அலுவலகத்துக்கு முன்பாகவுள்ள கட்டடத்தில் இந்த புதிய கோப்சிற்றி திறந்து வைக்கப்பட்டது.
நிகழ்வில் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி.சந்திரசேகரன் கலந்துகொண்டு கோப்சிற்றியை திறந்துவைத்தார்.
இதனூடாக நுகர்வோருக்கு பொருள்களை நியாய விலையில் விற்பனை செய்ய சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

(ச-17)



கிளிநொச்சி பளை தர்மக்கேணி அ.த.க. பாடசாலையின் 70ஆவது ஆண்டு விழா அதிபர் க.உதயகுமார் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. (ம-9)



வரணி மத்திய கல்லூரியின் 69ஆவது ஸ்தாபக தினமும், பரிசில் நாள் நிகழ்வும் அதிபர் ஆ.தங்கவேலு தலைமையில் அண்மையில் சிறப்பாக நடைபெற்றது. வரணி சிட்டிபுரம் கண்ணகி அம்பாள் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ இ.குமாரசாமிக் குருக்களின் ஆசியுரையுடன் ஆரம்பமான நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி சு.பரமானந்தம் கலந்துகொண்டார். (ம-159,9)



தென்மராட்சி கல்வி வலயத்தின் செயற்பட்டு மகிழ்வோம் தெரிவுப் போட்டி மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாட சாலையில் அண்மையில் இடம்பெற்றது.

(ம-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரணைமடுவில்
# 103 பானைகளில் பொங்கல் விழா!

கிளிநொச்சி, ஜன. 14

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் 103ஆவது வருடத்தை நினைவுகூரும் வகையில் 103 பானைகளில் தமிழரின் பாரம்பரிய திருநாளான பொங்கல் விழா இடம்பெறவுள்ளது.

இரணைமடு கமக்கார அமைப்புகளின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு கனகாம்பிகை அம்மன் ஆலய முன்றிலில் எதிர்வரும் 17ஆம் திகதி காலை 9 மணிக்கு இந்தப் பொங்கல் விழா இடம்பெறவுள்ளது.

இதன்போது கடந்த வருடம் ஓய்வு பெற்ற மற்றும் இடமாற்றம்பெற்ற துறைசார் திணைக்கள அதிகாரிகளும் மதிப்பளிக்கப்படவுள்ளனர். விவசாயத்துறை சார்ந்த திணைக்கள தலைவர்கள், உத்தியோகத்தர்கள், யாழ்ப்பாண விவசாய பீடம் மற்றும் கிளிநொச்சி விவசாயக் கல்லூரி மாணவர்களின் பங்குபற்றுதலுடன் நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ச-13)



கொட்டடி பகுதியில் வசிக்கும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு தைத் திருநாளை முன்னிட்டு, யாழ். மாநகரசபை உறுப்பினரான லயன் கலாநிதி ந.தனேந்திரனால் பொங்கல் பொருள்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (ம)



தைத்திருநாளை முன்னிட்டு யாழ்.விழிப் புலனற்றோர் சங்கம் தமது அங்கத்தவர்களுக்கு பொங்கல் பொதிகள் மற்றும் புத்தாடைகளை வழங்கியுள்ளது. சங்கத்தின் தலைவர் யோ.சுதாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 300 பேருக்கு பொங்கல் பொதிகள் கையளிக்கப்பட்டன. (ச-17)



யாழ்ப்பாணம் அரியாலை வடமேற்கு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில், பொருளாதாரத்தில் நலிவடைந்த 15 குடும்பங்களுக்கு வட இலங்கை சமாதான நீதிவான் சங்கமும், காங்கேசன்துறை கோல்டன் ஸ்டார் லயன்ஸ் கழகமும் இணைந்து பொங்கல் பொருள்களை அண்மையில் கையளித்தன. (ம-9)

## பளை மக்களுக்கு பொங்கல் பொதி!

பளை, ஜன. 14

பளை இந்திராபுரம் கிராமத்தில் வசிக்கும் அனைத்துக் குடும்பங்களுக்கும் நேற்றுமுன்தினம் பொங்கல் பொதிகள் விநியோகிக்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் ஏற்பாட்டில் புலம்பெயர் உறவொருவரின் நிதியுதவியில் இந்தப் பொங்கல் பொதிகள் வழங்கப்பட்டன. பச்சிலைப்பள்ளி பிரதேசசபைத் தவிசாளர் சுரேன் சுப்பிரமணியம் நிகழ்வில் பங்கேற்று பொங்கல் பொதிகளை கையளித்தார். (ச-9)

## பட்டிப்பொங்கல் திருநாளில் கோபவனியும் உற்சவமும்

யாழ்ப்பாணம், ஜன. 14

பசுக்கள், இடபங்களை பாதுகாக்கும் சகல சமய நிறுவனங்களின் இணையம் மற்றும் சத்திரம் ஞான வைரவர் ஆலய நிர்வாகத்தினர் ஆகியோர் இணைந்து நடத்தும் கோமாதா உற்சவமும் கோபவனியும் பட்டிப்பொங்கல் திருநாளன்று யாழில் இடம்பெறவுள்ளன.

திருமுறை பாராயணச் செல்வர் ப.பாலசுப்பிரமணியம் தலைமையில் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

கோமாதா பவனி பிற்பகல் 2 மணியளவில் கே.கே.எஸ். வைரவர் ஆலயத்தில் ஆரம்பித்து மின்சார நிலைய வீதி, பெரிய கடை, யாழ். பேருந்து நிலைய மேற்கு வீதி, ஆஸ்பத்திரி வீதியூடாக சத்திரத்து ஞானவைரவர் ஆலயத்தை வந்தடையும்.

நிகழ்வில் பங்குபற்றும் பசுக்களுக்கு தவிடு இலவசமாக வழங்கப்படுவதுடன் அடியார்களுக்கு பசும்பாலும் பிரசாதமாக வழங்கப்படும் என ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ச)

## கூட்டுறவுச் சங்கங்களால்
# அங்கத்தவர்களுக்கு பொங்கல் பொதிகள்

யாழ். மாவட்டத்திலுள்ள பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் தமது அங்கத்தவர்களுக்கு இலவசமாக பொங்கல் பொதிகளை வழங்கி வருகின்றன.

சுமார் இரண்டாயிரம் ரூபா பெறுமதியான பொங்கல் பொதிகள் அங்கத்தவர்களுக்கு கையளிக்கப்படுகின்றன. அதனைவிட சில சங்கங்கள் பொங்கல் பொதிகளுடன் பானைகளையும் வழங்கி வருகின்றன. (ச-17)

# மைத்திரிபால மீது குற்றவியல் வழக்கு
## திருச்சபை கோரிக்கை

கொழும்பு, ஜன. 14

ஈஸ்டர் தாக்குதலை தடுக்க தவறிய குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்டோருக்கு எதிராக குற்றவியல் நடைமுறையின் கீழ் வழக்குத் தொடருமாறு கத்தோலிக்கத் திருச்சபை கோரிக்கை விடுத்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால, புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பொலிஸ் தலைமையகப் பிரதி பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்த்தன மற்றும் சிசிர மெண்டிஸ் ஆகியோர் மீது குற்றவியல் நடைமுறைகளின் கீழ் வழக்குத் தொடரப்பட வேண்டுமென திருச்சபை குறிப்பிட்டுள்ளது.

'உயர் நீதிமன்றத்தால் பரிந்துரைக்கப்பட்ட இழப்பீடுகளில் நாங்கள் அதிக கவனம் செலுத்தமாட்டோம், எனினும், ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பாக முழு உண்மையைக் கண்டறியும் எங்கள் முயற்சிகளைத் தொடருவோம். இந்தத் தாக்குதலின் பின்னணியில் சதி இருப்பதாக முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா தெரிவித்துள்ளார். எனவே அனைத்தையும் வெளிக்கொண்டு வருவதற்கான முயற்சிகளை நாங்கள் தொடர்வோம்' என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார். (அ-ஒ-இ)

### வடக்கு...

உயிரிழப்புத் தொடர்பில் உடற்கூற்றுப் பரிசோதனை செய்யுமாறு அவரது மனைவி சந்திரிகா பிரியங்கனி குரே கோரிக்கை விடுத்துள்ளார்.

களுத்துறை போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி எஸ்.ஏ.குமசாரு முன்னிலையில் நேற்று இடம்பெற்ற இறப்பு விசாரணையின் போதே அவர் இவ்வாறு கோரியுள்ளார்.

ரெஜினோல்ட் குரேயின் முன்னாள் தனிப்பட்ட செயலர் ஜே.எம்.சோமேசிறியின் சாட்சியத்தின் பின்னர், அவர் அவ்வாறு கோரிக்கை முன்வைத்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் கெவிது குமாரதுங்க உட்பட நால்வருடன் ஏற்பட்ட காரசாரமான வார்த்தைப் பரிமாற்றத்தின் பின்னரே ரெஜினோல்ட் குரே மாரடைப்புக்குள்ளானதாக, ஜே.எம். சோமேசிறி சாட்சியமளித்துள்ளார்.

களுத்துறை வட்டுவையில் உள்ள உணவகத்தில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற சந்திப்பின் போது மாரடைப்புக்கு உள்ளான குரே மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்திருந்தார்.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் கலந்துரையாடிய போதே அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஒ-இ)

### பொங்கலன்று...

துண்டிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாலை வேளையில் ஒரு மணி நேரமும், இரவில் 1 மணி நேரம் 20 நிமிடமும் மின்சாரம் துண்டிக்கப்படவுள்ளது. வழமையாக பண்டிகை நாள்களில் மின் துண்டிப்பு மேற்கொள்ளப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஜனநாயக...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறி இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிடவுள்ளதாக அறிவித்த பின்னர், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோவும், புளொட்டும் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளை இணைத்து தேர்தலை எதிர்கொள்வதற்கான பேச்சுக்களை கடந்த சில நாள்களாக முன்னெடுத்து வந்தனர்.

ரில்கோ விடுதியில் நேற்றுக் காலை இறுதிக்கட்டப் பேச்சு நடைபெற்றது. இந்தப் பேச்சுக்களில் ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் கலந்து கொண்டிருந்தனர்.

இதற்கு விக்னேஸ்வரன் தரப்பினர் ஆரம்பத்தில் எதிர்ப்பு வெளியிட்டனர். அவர்கள் தொடர்பில் சில தகவல்கள் இருப்பதால் அவர்களை பிரதான தரப்பினராக இணைக்கமுடியாது என்றும், உப தரப்பாக இணைக்கலாம் எனவும் தெரிவித்தனர். ஆனால், ஏனைய தரப்பினர் அனைவரும் அவர்களை பிரதான தரப்பாக இணைக்கவேண்டும் என்றும், அவர்கள் தொடர்பில் உள்ள தகவல்களைப் பகிரங்கமாகத் தெரிவிக்குமாறும் கூறினர். ஜனநாயகப் போராளிகள் கட்சியினரை வைத்துக்கொண்டு அவர்கள் தொடர்பில் தெரிவிக்க முடியாது எனக் கூறிவிட்டு விக்னேஸ்வரன் தரப்பினர் கூட்டத்திலிருந்து வெளியே சென்றனர்.

சிறிது நேரம் ஆலோசித்த பின்னர் மீண்டும் வந்த விக்னேஸ்வரன், ஜனநாயகப் போராளிகள் கட்சியினரை பிரதான தரப்பாக இணைக்க சம்மதம் வெளியிட்டனர்.

இதன் பின்னர் எந்தச் சின்னத்தில் போட்டியிடுவது என்பது தொடர்பில் இழுபறி நிலை தோன்றியது. விக்னேஸ்வரன், தனது தமிழ் மக்கள் கூட்டணியின் மான் சின்னத்திலேயே போட்டியிடவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். ஆனால் ஏனைய பங்காளிக் கட்சிகள், ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ள ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி என்ற கட்சியின் குத்துவிளக்குச் சின்னத்தில் போட்டியிடலாம் என்று ஆலோசனை கூறின. ஆனால் விக்னேஸ்வரன் அதற்கு மறுத்துடன், மான் சின்னத்தில் மாத்திரமே போட்டியிடலாம் என்று மீண்டும் அழுத்தமாகத் தெரிவித்தார்.

இந்த இழுபறி பலமணி நேரம் நீடித்தது. இவ்வாறு ஒரு கட்சியின் சின்னத்தில் (தமிழ் மக்கள் கூட்டணியின் மான் சின்னம்) போட்டியிடுவது என்றால், நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி இதுவரை காலமும் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டதைப் போன்று அவர்களுடன் இணைந்து போட்டியிட்டிருப்போமே? அது தவறு என்றுதானே இதுவரை சுட்டிக்காட்டி வந்தோம். பின்னர் எவ்வாறு ஒரு கட்சியின் சின்னத்தில் போட்டியிடுவது என்று ரெலோ மற்றும் புளொட் கட்சியினர் கேள்வி எழுப்பினர்.

பொதுவான கூட்டணியாகவுள்ள குத்துவிளக்குச் சின்னத்தில் போட்டியிடாவிட்டாலும், கடந்த பொதுத் தேர்தலில் நீங்கள் (விக்னேஸ்வரன்) போட்டியிட்ட தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் மீன் சின்னத்தில் போட்டியிடலாம் என்று ஏனைய கட்சிகள் கேட்டன. அதற்கும் விக்னேஸ்வரன் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இதன்போது, மான் சின்னம் தவிர்ந்த ஏனைய சின்னத்தில் போட்டியிடுவதாக இருந்தால் அந்தக் கட்சியின் பொதுச் செயலர் பதவி தன்னிடம் தரப்பட வேண்டும் என்று விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். அதற்கு, அதனை இப்போது செய்வதற்கான கால அவகாசம் குறைவாக உள்ளது. தேர்தல் முடிவடைந்த பின்னர் அதனைச் செய்யலாம் என்று ஏனையதரப்புக்கள் விக்னேஸ்வரனிடம் தெரிவித்துள்ளன. ஆனாலும் அவர் அதனை ஏற்கவில்லை. தாங்கள் வெளியேறுகின்றோம் என்று தெரிவித்து நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன், முன்னாள் யாழ். மாநகர மேயர் வி. மணிவண்ணன், பேராசிரியர் வி.பி.சிவநாதன் ஆகியோர் அங்கிருந்து சென்றனர்.

ஏனைய தரப்புக்கள் தொடர்ந்து ஆலோசனை நடத்தின. இறுதியாக புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியன இணைந்து குத்துவிளக்குச் சின்னத்தில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியாகப் போட்டியிடவுள்ளன. இது தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை இன்று கைச்சாத்திடப்படவுள்ளது. (அ-ஒ-5-26)

### தமிழக...

டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல்களுக்கு எதிராக குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கத்தினர் நேற்றுப் பேரணி ஒன்றை முன்னெடுத்தனர். பேரணியின் முடிவில் கடற்றொழில் அமைச்சரின் அலுவலகத்தில் மனுவைக் கையளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'இந்திய மீனவர்களின் அத்துமீறல் நீண்ட காலமாக நடைபெறுகிறது. இதில் கடற்படையை மட்டும் நம்பாது நீங்களும் எதிர்க்கவேண்டும். அதற்காக பிடிப்பதற்கும் இடிப்பதற்கும் இரண்டு மிகப் பெரிய படகுகளை நான் தருகிறேன்' என்று அமைச்சர் டக்ளஸ் குறிப்பிட்டார்.

இதன்போது, படகு வெள்ளோட்டத்துக்கு நீங்கள் வரவேண்டும் என்று மீனவர்கள் அமைச்சரிடம் கோரினர். அதற்கு அவர், 'நான் ஒன்றைக் கூறிவிட்டு பங்கருங்குள் (பதுங்குகுழி) ஒழிந்திருக்கமாட்டேன். நானும் வருவேன்' - என்றார்.

குருநகரிலிருந்து ஆரம்பமாகிய இந்தப் பேரணி நீரியல் வள திணைக்களத்துக்குச் சென்று அங்கு மனு கையளிக்கப்பட்டது. பின்னர் அங்கிருந்து கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அலுவலகத்துக்குச் சென்றது. அங்கும் மனு கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-27)

### தேசிய...

தமிழ்த் தலைமைகள் புறக்கணிக்க வேண்டும். அன்றைய தினம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கவனவீர்ப்புப் போராட்டமும் நடத்தப்படும் - இவ்வாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் நேற்று அறிவித்தனர்.

மாணவர் ஒன்றியக் கேட்போர் கூடத்தில் நேற்று பி.ப. 3 மணிக்கு இடம்பெற்ற ஊடக சந்திப்பில் மாணவர் ஒன்றியத் தலைவர் அ.விஜயகுமார் தெரிவித்ததாவது, காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் என்று எந்தவொரு விடயத்துக்கும் தீர்வு காணப்படவில்லை. இவ்வாறான நிலையில் தேசிய தைப் பொங்க விழாவை யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி ரணிலுடன் சேர்ந்து எமது மக்கள் எப்படிக் கொண்டாடமுடியும்? தைப்பொங்கல் விழா தொடர்பில் எமக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் மக்களுக்குத் தீர்வை வழங்கிய பின்னர் அதைக்கொண்டாடுமாறு கூறுகின்றோம்.

தேசிய பொங்கல் விழாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1 மணிக்கு யாழ். பல்கலைக்கழக முன்றிலில் ஆரம்பமாகும் கவனவீர்ப்புப் பேரணி, நிகழ்வு நடைபெறும் துர்க்கா மணிமண்டபத்தில் முடிவடையும்.

இந்தப் பொங்கல் நிகழ்வில் தமிழ்த் தலைமைகள், பிரதிநிதிகள் கலந்து கொள்ளக் கூடாது. அதைப் புறக்கணிப்பதுடன் எங்கள் போராட்டத்தில் அவர்கள் இணைந்து கொள்ளவேண்டும் - என்றார். (அ-ஒ-125)

### கோதுமை...

220 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ கோதுமை மா 200 முதல் 195 ரூபா வரை விற்பனை செய்யப்படவுள்ளது. (அ-ஒ-இ)

### கொல்லன்கலட்டியில்...

பெற்றது.

வீட்டிலிருந்தவர்கள் வெளியில் சென்றிருந்தபோது, பின்கதவை உடைத்து உள்ளே நுழைந்து பிரத்தியேகமாக வைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்த தாலிக்கொடியைத் திருடிச் சென்றுள்ளனர். வீட்டார் திரும்பி வந்தபோது, கதவு உடைக்கப்பட்டிருந்தமையை கண்டு அதிர்ச்சியடைந்தனர். உள்ளே சென்று பார்த்தபோது தாலிக்கொடி திருடப்பட்டமை தெரியவந்துள்ளது.

காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-ஒ-23)

### விரலை...

யில், மோதிரம் அணிந்திருந்த விரலை கத்தியால் வெட்டி மோதிரத்தைக் கொள்ளையிட்டுள்ளனர். இந்தச் சம்பவம் பருத்தித்துறை தம்பசிட்டி பூவக்கரைப் பகுதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பைச் சேர்ந்த பழனியாண்டி என்பவர் தம்பசிட்டியிலுள்ள அவரது சகோதரரின் இல்லத்தில் தங்கியிருந்த போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டினுள் அத்துமீறி நுழைந்த கொள்ளையர்கள் மூவர், அவரின் கையிலிருந்து மோதிரத்தை கொள்ளையிட்டுள்ளனர். மற்றைய மோதிரத்தை கழற்ற முடியாத நிலையில் கைவிரலை வெட்டி மோதிரத்தை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

காயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-26)

### 11 மாத...

உட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தனியார் மருத்துவமனையில் அம்புலன்ஸ் சாரதியான சந்தேகநபர் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் 11 மாதக் குழந்தை தாயுடன் உறங்கியுள்ளது. தாய் தன்னை யாரோ தொடுவது போன்ற உணர்வு ஏற்பட நித்திரையால் எழுந்துள்ளார். அதன்போது அவர் அருகில், தாயின் சகோதரியின் கணவர் இருந்துள்ளார். தாயார் கூச்சலிடவே அயலவர்கள் அங்கு திரண்டுள்ளனர். தாயின் சகோதரியின் கணவரை 'முறையாகக் கவனித்துள்ளனர்'.

இதன் பின்னர் குழந்தையின் பெண்ணுறுப்பு பகுதி சிவந்து வீங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது. மறுநாள் வீக்கம் மேலும் அதிகரித்ததையடுத்து குழந்தையை சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கொண்டு வந்துள்ளார். மருத்துவப் பரிசோதனையின்போது குழந்தை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து தாயின் சகோதரியின் கணவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். கைதான சந்தேகநபருக்கு எதிராகப் பல்வேறு முறைப்பாடுகள் உள்ளன என்று பொலிஸார் கூறுகின்றனர். (அ-ஒ-5-20-26-27-125)

### சின்னம்...

லேயே நாங்கள் வெளியேறினோம் என்று நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று மாலை நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழ்க் கட்சிகள் சில என்னைப் பொம்மை போல பாவித்து தாங்கள் நினைத்ததைச் செய்வதற்கு முயற்சித்தன போன்று தெரிந்தது. அது எனக்கு மன வேதனையை ஏற்படுத்தியது. ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானங்களுடன் அங்கு வந்திருந்து அதனை மேற்கொள்ளத் திட்டமிட்டனர். சில விடயங்களில் இணக்கம் ஏற்பட்டபோதும் பல விடயங்கள் முரண்பாட்டை தோற்றுவித்தன.

ஐந்து கட்சிகளின் கூட்டணியாக நாம் பேச்சு ஆரம்பித்த போது நேற்றைய கூட்டத்தில் எமக்குத் தெரியாமல் திடீரென புதிதாக ஜனநாயகப் போராளிகள் கட்சியை அழைத்து வந்திருந்தனர்.

ஜனநாயகப் போராளிகள் கட்சி பல்வேறு குழுக்களுடன் தொடர்புடையதாக நான் அறிந்தேன். புலிகளோடு இருக்கும் போது அவர்கள் எப்படி இருந்தார்கள் என்றும் தற்போது அவர்கள் எப்படி இருக்கின்றார்கள் என்பதனையும் நாம் அறியவேண்டும். அவர்களை ஆறாவது கட்சியாக கூட்டணிக்குள் இணைக்கும் முடிவை ரெலோ, புளொட் தன்னிச்சையாக எடுத்தார்கள். ஆனாலும், நாம் அதனை ஏற்றுக் கொண்டோம்.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி என கட்சியின் பெயரைத் தெரிவித்து அதனை தமிழ் தேசியக் கூட்டமைப்பாக செயற்படுவதாக முடிவு எடுக்கப்பட்டது. மேலும் கூட்டணியின் தலைமைப் பதவியை விட்டுக் கொடுத்திருந்தோம். சின்னம் அல்லது கட்சி செயலர் பதவியையாவது எமது கட்சிக்குத் தருமாறு கோரினோம். அவர்கள் அதற்கு மறுத்ததால் நாம் கூட்டத்தில் இருந்து வெளியேறினோம்.

எதிர்வரும் தேர்தலில் மான் சின்னத்தில் தமிழ் மக்கள் கூட்டணி போட்டியிடும் - என்றார். (அ-ஒ-26)

### கட்டுப்பணம்...

ரங்களிலும் போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தை நேற்றுச் செலுத்தியது.

வடக்கு மாகாணசபை முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா தலைமையிலான குழுவினரால் இந்தக் கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் 3 அரசியல் கட்சிகளும், 4 சுயேச்சைக் குழுக்களும் இதுவரை கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளன. (அ-ஒ-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டைதீவில் 100 ஏக்கர் பரப்பில் சர்வதேச விளையாட்டு மைதானம்!

## அமைப்பது தொடர்பில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன. 14

மண்டைதீவில் சுமார் 100 ஏக்கர் பரப்பளவில் சர்வதேச விளையாட்டு மைதானமொன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகளை விரைவில் ஆரம்பிப்பது தொடர்பிலான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.



வடமாகாண இளைஞர் யுவதிகளுக்கான ஒருங்கிணைந்த அணுகுமுறையை ஏற்படுத்துவது தொடர்பிலான மாகாண மட்ட கலந்துரையாடல் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரொஷான் ரணசிங்க தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போதே, மேற்படி விளையாட்டு மைதானத்தை அமைப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. சர்வதேச விளையாட்டு மைதானத்துக்காக ஏற்கனவே 50 ஏக்கர் ஒதுக்கப்பட்டுள்ளது. எனினும் மைதானம் அமைக்க 100 ஏக்கர் வரை தேவைப்படுவதாகவும் அதைப் பெற்றுக்கொள்வது தொடர்பிலும் கலந்துரையாடலின்போது தெரிவிக்கப்பட்டது. மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஜிம்னாஸ்டிக் அரங்கம், விளையாட்டு மையங்கள் என்பன அமைப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது. கலந்துரையாடலில் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரொஷான் ரணசிங்க, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹண திசாநாயக்க, வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன், வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ம-14-27)

# விசேட சுற்றிவளைப்பில் 15 நபர்கள் கைதாகினர்!

சாவ., ஜன.14

சாவகச்சேரி கோயிற் குடியிருப்பு உதய சூரியன், மகிழங்கேணி ஆகிய கிராமங்களில் நேற்று வெள்ளிக்கிழமை காலை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் 15 நபர்கள் கைது செய்யப்பட்டனர். பாடசாலை செல்லாத மாணவர்கள், இளவயது திருமணம் மற்றும் போதைப்பொருள் கள்வைத்திருந்தோர் என 15 பேர் கைது செய்யப்பட்டனர். பொலிஸார், பிரதேசசெயலகத்தினர், கிராம அலுவலர் உள்ளிட்டவர்கள் இணைந்து இந்த சுற்றிவளைப்பை மேற்கொண்டனர். கைது செய்யப்பட்ட 15 நபர்களிடமும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ஓ-14-9)


### தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள பிரபல தனியார் நட்சத்திர விடுதிக்கு நன்கு அனுபவம் உள்ள North indian chef தேவை.
கவர்ச்சிகரமான சம்பளத்துடன் வேலை நேர உணவும் வழங்கப்படும். (CS 22820) (4.6)

076 624 8529, 077 780 0075

### ASTRO STUDY ABROAD DAY




கடந்த 15 வருடங்களாக எண்ணற்ற மாணவர்களுக்கு வெளிநாட்டுக் கல்விக்கான வாய்ப்புக்களை பெற்றுக்கொடுத்த நிபுணத்துவம் வாய்ந்த நிறுவனம்

சந்திப்பு தொடர்பான விபரங்கள்
காலம் : ஜனவரி 21 - 2023 | நேரம் : 9.00 - 4.00 pm
இடம் : Astro Trend Jaffna Branch
Register Free : 0776147174

Max Adz

- பல்கலைக்கழகப் பிரதிநிதிகளை யாழில் சந்திக்கும் அரியவாய்ப்பு !
- UK,Canada,Australia ஆகிய நாடுகளில் 200 ற்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களில் பாடநெறிகளை தெரிவு செய்யும் வாய்ப்பு !
- IELTS தகமை, Scholarship,Financial Sponsorship போன்றவைகளின் விபரமான விளக்கங்கள்.
- பகுதிநேர வேலைவாய்ப்பு,கற்கைநெறியின் பின் PR பற்றிய ஆலோசனைகள்.

ASTRO TREND
ASTRO
Head Office : No.20, 42nd Lane, Colombo 06.
Branch : No.108, Palaly Road, Thirunelveli,Jaffna.

### காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வீதி கோப்பாய் தெற்கில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. இரண்டு பரப்பாக பிரித்துக் கொடுக்கப் படும்.

தொடர்பு: 077 809 1094

### விற்பனைக்கு

பாட்டுவாள், றோதைவாள் பட்டடை விற்பனைக்குண்டு.

077 257 7688 (CS/22812)4,6)

### வரலாறு, கணிதம்
### 09 - O/L, A/L வகுப்புக்கள்

தனியாகவோ, குழுவாகவோ கற்பிக்கப்படும். தேசிய ரீதியாக சிறந்த பெறுபேறுக்காக வழி காட்டும் உங்கள் ஆசான்.( தனியார் கல்வி நிறுவனங்களும் தொடர்பு கொள்ளலாம்)

077 482 5438 (CS/22810) 4,6)

### காணி விற்பனைக்கு

பலாலி வீதி, புன்னாலைக்கட்டுவன் சந்தியிலிருந்து சுன்னாகம் செல்லும் வீதியிலிருந்து 1/2 KM தூரம், பிரதான வீதியிலிருந்து இரண்டாவது காணி. 2 (இரண்டு) பரப்பு நல்ல தண்ணீர், நல்ல சூழல், சிவப்பு மண் விற்பனைக்கு உண்டு.

076 7558 606

### மணமகன் தேவை

லண்டனில் குடியுரிமை பெற்ற 1997 இல் பிறந்த கன்னிராசி உத்திரம் நட்சத்திரமுடைய மணமகளுக்கு உள் நாட்டில் மணமகன் தேவை.

(CS 22783)(4,6) 077 427 1512

### உழவர் அரிசிக்கடை

உழவர் - ஆட்டக்காரி அரிசி
1Kg - Rs. 225.00/=
10kg Bag - Rs. 2250.00/=
25Kg Bag Rs.5600.00/=
50Kg Bag Rs. 11200.00/= (CS/22759)

மருதனார்மடம் சந்தை
076 287 8655

### கடை விற்பனைக்கு

**இல.13, செம்மார் தெரு லேன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்** என்னும் முகவரியில் அமைந்துள்ள 25 அடி நீளமும் 16 அடி அகலமும் உடைய கடை விற்பனைக்குண்டு.
விலை நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.
பார்வையிடும் நேரம்:
காலை 9 மணி முதல் மாலை 6.00 மணி வரை.

தொடர்பு:- ஜெயம்
077 986 5457

### இறுதி வணக்கம்

அன்னை மடியில் 05 • 10 • 1942



இறைவன் அடியில் 12 • 01 • 2023

**சுந்தரம் டிவகலாலா**

(யாழ் மாவட்ட உள்ளூராட்சி முன்னாள் உதவி ஆணையாளர், வடக்கு கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் முன்னாள் செயலாளர், ஆறுதல் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர்)

வடக்கு கிழக்கு மாகாணத்தின் கல்வி அபிவிருத்திக்கு ஆதாரமாக விளங்கிய திரு. சுந்தரம் டிவகலாலா அவர்கள் 12.01.2023 அன்று எம்மை விட்டுப் பிரிந்தார். அவர்களுக்கு எங்கள் நெஞ்சம் நெகிழ்ந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

வடலிகள் வானுயரும்
ஆறுதல் சமூகம்
55/1 ஸ்டான்லி கல்லூரி ஒழுங்கை,
அரியாலை, யாழ்ப்பாணம்.

(CS/22813)4,6)


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 ... advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் ... இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.01.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org